# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா
ம
க்
கா
ர
ன்

JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15

VOLUME - 7 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 1
JANUARY - 2023 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




எனகன்பான ஜாமக்காரன் வாசகர்களுக்கு

உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இந்த புதுவருடமும் வரும் ஆண்டுகளும் உங்களனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய வாழ்த்துகிறேன்.

நீங்கள் எனக்கு கடந்த காலத்திலும் இப்போதும் அனுப்பிகொண்டிருக்கும் **காணிக்கைகள்** யாவும் என் **இரண்டு** வங்கியிலும் வந்து சேர்ந்தது. M.O., காசோலை வழியாக அனுப்பிய காணிக்கைகளும் கிடைத்தது. மிக்க நன்றி.

கடந்த வருடம் பலருக்கு பிரச்சனைகளும், கொரோனா வியாதி, காரணமாக பலருடைய குடும்பமும் **வியாபாரமும்** நொடிந்து போனது. அதன் பாதிப்புகளிலிருந்து கடந்த வருடம்தான் மக்கள் **கொஞ்சம் கொஞ்சமாக** விடுபட்டு புது வாழ்க்கைக்கு திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். இழந்ததையெல்லாம் எப்படி திரும்ப பெறப்போகிறார்களோ! நடுத்தர குடும்பங்கள் ஓரளவு சமாளித்து வெளி வந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் **கோடிக் கணக்கில்** முதல் போட்டு வியாபாரம் செய்தவர்கள், பல கோடிகள் **கடன் வாங்கி** எல்லாம் இழந்தவர்களின் நிலை மிகப் பரிதாபம். இவர்கள் எப்படி **பழைய நிலைக்கு** மீளப்போகிறார்களோ ! ஆனால் இந்த நெருக்கடியில்தான் நாம் கர்த்தரிடம் மிகவும் நெருக்கமடைய முடியும். மேலும்

# JANUARY - 2023

வேதத்தில் கூறியதைப்போல **தாவீது தான் இழந்ததையெல்லாம்** திருப்பிக்கொண்டான் என்று பார்க்கிறோம். அவன் கர்த்தரை நம்பினதால் தெய்வம் அவனை கைவிடாமல், சோர்ந்து போகாமலிருக்க பெலன் தந்து பிரச்சனைகளை சமாளிக்கும் ஞானம் தந்து முழு குடும்பத்திலும், கூட வேலை செய்யும் வேலையாட்களும் முன்பு வாழ்ந்ததைவிட செழிப்பாக வாழ்ந்தார்கள். **உலக மக்கள்** முன்பும், **சிலை வணக்கக்காரர்கள்** முன்பும் **உறவினர்களுக்கு** முன்பும் கர்த்தர் தாவீதையும் குடும்பத்தையும் **வெட்கப்படுத்த விடாமல்** காத்தார். இப்படியாக கர்த்தரை நம்புகிறவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். கர்த்தரை ருசித்து பாருங்கள் என்று வேதம் கூறுகிறது. கர்த்தர் நல்லவர்.

எனக்கு வந்த ஏராளமானவர்களின் **சாட்சிக் கடிதம்** மூலம், **தொலைபேசி** மூலம் எப்படியெல்லாம் கர்த்தரை முழுமனதாய் நம்புறகிறவர்களை கர்த்தர் **கணப்படுத்துகிறார்** என்பதை அறிந்து **தொலைபேசியிலேயே ஸ்பீக்கரில் போட்டு** அவர்களோடு சேர்ந்து **நானும் தேவனை துதித்தது** எத்தனை சந்தோஷ அனுபவமாக இருந்தது.

**கொரோனா** வியாதியிலிருந்து சுகம் பெற்று எழுந்தவர்கள் மீண்டும் என்னைப்போல் **பெலம்பெற்று** பழைய தொழிலை செய்யவும், மீண்டும் **புது வேலை** கிடைத்து முன்பைவிட கூடுதல் சம்பளமும் பெற்று வாழ்கிறார்கள் என்பதை அறிந்து தேவனை துதிக்கிறேன்.

சிலர் மிக நீண்ட பயணம் செய்து என்னை என் வீட்டிற்கே வந்து நேரில் காணவும் கர்த்தர் தங்களுக்கு செய்த **அற்புதத்தை** விளக்கி சொல்லும் போது தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்பட்ட **அனுபவம் போல** இருந்ததை கேட்டு அவர்களோடு சேர்ந்து நானும் துதித்து அவர்களை **ஆசீர்வதித்து** அனுப்பினேன். இந்த சம்பவங்கள் சாட்சிகள் யாவும் கேட்க எத்தனை சந்தோஷமாக இருக்கிறது. கர்த்தருக்கே மகிமை.

உங்களுக்காக, **பிள்ளைகளுக்காக,** தொழிலுக்காக நீங்கள் செய்யும் **வேலைக்காக** உங்கள் **வருமானம்** நஷ்டமடையாதபடியிருக்க கர்த்தர் நீங்கள் ஆரோக்கியத்தோடு வாழ **இந்த புது வருடத்திலும் ஜெபிப்பேன்.**

– டாக்டர் **புஷ்பராஜ்**

## ONLINE BANKING (NEFT)
### Name : M G E PUSHPARAJ

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# புத்தாண்டுத் தீர்க்கதரிசனங்களும் வாக்குத் தத்தத்தங்களும்



Bro. R. **ஸ்டான்லி**

ஒவ்வொரு ஆண்டின் இறுதி மாதங்களில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டுக் கொண்டாட்ட ஆயத்தங்களில் திருச்சபைகள் தீவிரமாயிருக்கும். கிறிஸ்துமஸ் முடிந்ததும் டிசம்பர் 31 நள்ளிரவு ஆராதனைக்கான ஆயத்தங்களில் விறுவிறுப்பாயிருப்போம். ஆண்டின் இறுதி நாளன்று இரவு 12 மணிக்குத்தான் புத்தாண்டு துவங்குகிறது என்பது தான் பொதுவான கருத்து. ஆனால் சரியாய்ச் சொன்னால் திருமறையின்படி முந்திய நாள் சூரிய அஸ்தமனத்துடன் தான் அடுத்த நாள் துவங்குகிறது. சிருஷ்டிப்பின் முதல் நாளானது விடியற்காலமும் சாயங்காலமும் அல்ல சாயங்காலமும் விடியற்காலமும் ஆகும். ஆதி 1:5. இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் நாட்களும் அப்படியே (வச8,13,19,23,31). பஸ்கா என்பது முந்திய நாளின் மாலையிலேயே துவங்குகிறது (யாத் 12:8). ஓய்வு நாளானது சாயங்காலம் துவங்கி மறுநாள் சாயங்காலம் வரை ஆசரிக்கப்பட்டது (லேவி 23:32).

வாரத்தின் முதல் நாளையே ஆதிச்சபையினர் கர்த்தருடைய நாள் என்று அனுசரித்தனர், அது ஏழாம் நாள் மாலையிலேயே துவங்கிற்று (அப் 20:7,11). எந்தவொரு நாளும் சூரிய அஸ்தமனத்திலேயே துவங்கி சூரிய அஸ்தமனத்திலேயே நிறைவடைகிறது. எனவே தான் சூரியன் அஸ்தமிக்குமுன் நமது எரிச்சல் தணிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம் (எபே 4:26). புதிய ஏற்பாட்டைப் பொருத்தவரை அதில் பகலும் இரவும் என்பதைவிட இரவும் பகலும் என்றே அதிகமாய் இருக்கிறது. (லூக் 2:37,அப் 20:31, 26:7 , 1 தெச 2:9 , 3:10,2 தெச3:8, 1தீமோ 5:5,2 தீமோ1:3). இக்குறிப்பினைச் சபை மேய்ப்பர்கள் சிலருடன் நான் பகிர்ந்து கொண்டபோது அவர்கள் தங்களது புத்தாண்டு ஆராதனையை டிசம்பர் 31 மாலை ஆறு மணிக்குமுன் தள்ளிக்கொண்டனர். ஆண்டின் முதல் நாளன்று நான் தூங்கிக் கொண்டிருக்காமல் விழிப்புடன் விறுவிறுப்பாயிருக்கும்படி 31ஆம் தேதி மாலை 6 மணி ஆராதனையே எனக்கு அதிகம் பிடிக்கும் ! புத்தாண்டுக் காலைவேளையில் சமாதானம் கூறி வாழ்த்தும்படிக் கிறிஸ்தவரல்லாத பத்துப் பன்னிரண்டு இல்லங்களுக்குச் சென்று வருவேன் (மத்.10:11-13, லூக் 10:5,6)

இப்படியிருந்தால் டிசம்பர் 31 அன்று இரவு 12 மணிக்குப் புத்தாண்டு ஆராதனை நடத்துவது தவறு என்று எவரும் சொல்லிவிட முடியாது. ஆனால் அந்தப் பன்னிரண்டு மணிக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் திருவிவிலியத்ததைச் சார்ந்ததல்ல. புத்தாண்டு ஆராதனை நடத்த வேண்டிய வேளையைப் பற்றி விவாதிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் புத்தாண்டின் விடியல் சம்பந்தமாகத் திருவசனத்திற்குப் புறம்பான பாரம்பரியங்களையும் செயல்பாடுகளையும் சுட்டிகாட்டவே இங்கு நான் முனைகிறேன்.

## (A) புத்தாண்டு தீர்க்கதரிசனங்கள்

புத்தாண்டுக்கான தீர்க்கத்தரிசனங்கள் சொல்லப்போவதாக அறிவித்துப் பிரபல பிரசங்கிமார் தங்களது புத்தாண்டு ஆராதனைகளுக்குத் திரள்களைக் கவர்கின்றனர். அவர்கள் கூறிய தீர்க்கத்தரிசனங்களில் பெரும்பாலானவை நிறைவேறுவதில்லை. சொல்லப்போனால் நடப்பதெல்லாம் மாறாகவே இருக்கும். 2020ஆம் ஆண்டு பொன்னான ஆண்டாயிருக்கும் என்றார் ஒரு பிரசங்கியார். அது பொன்னாகவும் இல்லை, வெள்ளியாகவுமில்லை! ஆவியானவரால் நிறைந்த வாலிபர் நங்கையர் பலரை 2020இல் ஆண்டவர் நங்கையர் அரசுப்பதவிகளில் அமர்த்துவார் என்றார். இன்னொருவர் இவ்வாண்டு அரசியல் களம் எப்படியிருந்தது என்று நாம் அறிவோம். அமெரிக்காவின் 2020 தேர்தலைக் குறித்துத் தீர்க்கத்தரிசிகள் எனும் பலர் முன்னுரைத்தது பொய்யாயிற்று. கொரோனா பரவத் துவங்கியது முதல் சொல்லப்பட்ட தீர்க்கத்தரிசனங்கள் பல நிறைவேறவேயில்லை. வேதத்தில் படிப்பறிவின்மை Biblical Litteracy என்பதற்கே பெயர்பெற்ற நவீனக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் எளிதில் வஞ்சிக்கப்பட்டுப் போகின்றனர். வஞ்சிக்கப்பட்டுப்போனவர்களுக்கு இவர்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளதே தெரியாது என்பதுதான் வஞ்சகத்திலும் வஞ்சகம். பகுத்தறிந்து நிதானிக்கும் கலையில் விசுவாசிகளைப் பயிற்றுவிக்காத சபைப் போதகர்களையே இங்கு குற்றம் சாட்டவேண்டும். விசுவாசிகள் வளருவதற்காக அல்ல, கூட்டம் பெருகவே பெரும்பாலான ஞாயிறு ஆராதனைகள் கட்டமைக்கப்படுகின்றன. பகுந்தறிந்து நிதானிக்கும் வரம் என்பது ஒருசிலருக்கு மட்டுமே அருளப்படுகிறது. ஆனால் ஒரு கலை (Gift) என்ற வகையில் அதில் எல்லாரும் கற்றுத் தேற வேண்டும் (1 கொரி 12:10, எபி 5:14,1 கொரி2:14).

**2020 டிசம்பர் 31நெருங்க நெருங்க பிரபலமான பொய் உதடுகளிலிருந்து பொய்த் தீர்க்கத்தரிசனங்கள் நிறைய வரும் என்று நான் தீர்க்கதரிசனம் உரைக்கிறேன்! ஆண்டவர் இயேசுவின்வார்த்தைகளை மறுபடியும் சொல்லுவதே எனது தீர்க்கதரிசனம் .** அநேகம் கள்ளத் தீர்க்கதரிகள் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள் (மத் 24:11) அவர்கள் செய்யும் ஒரு சில அடையாளங்கள் அற்புதங்களினால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படுவார்கள் (வச. 24). ஆண்டவர் தரும் முன்னெச்சரிப்பு நாம் முன்னதாகவே ஆயுதம் தரித்து ஆயத்தமாயிப்பதற்காகவே (வச. 25). **பொய்த் தீர்க்கதரிசிகளே மெய்த் தீர்க்கத்தரிசிகளைவிட அதிகமாயிருப்பர் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.** அநேகர் என்ற சொல் திரும்பத் திரும்ப வருவதைக் கவனியுங்கள் (மத் 7:15,22,24:5,2 கொரி 2:17,

பிலி 3:18,1 யோ2:18). தந்திரத் தீர்க்கதரிசிகளின் மறைவான உள்நோக்கம் பண ஆசையே (2பேது 2:3,15). அவ்வப்போது ஏதோ உரு சில நல்ல தீர்க்கதரிசனங்களைச் சொல்லிக்கொள்ளும் இவர்களே நவீன பிலேயாம்கள் (யூதா. 11, எண் 22:15-17).

இறுதிக்கால தீர்க்கதரிசனம் என்றால் என்ன என்ற அடிப்படை அறிவு நம்மைப் பெரும் தீங்குகளிலிருந்து பாதுகாக்கும். பைபிளே தீர்க்கதரிசன வசனம் என்றழைக்கப்படுகிறது (2பேது1:19).அது தீர்க்கதரிசன ஆகமங்கள் எனப்படுகிறது (ரோ 16:25). பழைய ஏற்பாடு என்றாலும் புதிய ஏற்பாடு என்றாலும் தீர்க்கதரிசனத்தின் மையக் கருத்து இயேசு கிறிஸ்துவே என்பதைக் கவனத்திலிருக்கவேண்டும். முழுக்க முழுக்க தீர்க்கதரிசனங்கள் அடங்கியுள்ள வெளிப்படுத்துதல் புத்தகம் கூறுவது. இயேசுவைப் பற்றிய சாட்சியே தீர்க்கதரிசனத்தின் ஆவியாய் (சாரமாய்) இருக்கிறது. (வெளி. 19:10). பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்கள் தங்களுக்குள் இருந்த கிறிஸ்துவின் முதல் வருகையைக் குறித்து ஏறத்தாழ 100 தீர்க்கதரிசனங்களும் அவரது மறு வருகை குறித்துக் கிட்டத்தட்ட 300 தீர்க்கதரிசனங்களும் பைபிளில் உண்டு. அவரே பிதாவானராகிய தேவனது இறு தியான தீர்க்கதரிசனக்குரல் (எபி1:1,2). தீர்க்கதரிசிகளிலெல்லாம் தீர்க்கதரிசியாக அவர் வந்தார். (உபா 18:17,18, அப் 3:22,23 யோ 6:14, 7:40). எனவே தீர்க்கதரிசனம் எதுவும் இன்று கிறிஸ்துவை மையப்படுத்தியாகவே இருக்க வேண்டும். இந்தப் பாணியில் தான் நாமெல்லாம் ஆவியின் அபிஷேகத்துடன் இந்த இறுதிக் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைக்க அழைக்கப்பட்டுள்ளோம் (அப் 2:16-18). அதி சீக்கிரம் நிகழவிருக்கும் இரண்டாம் வருகைக்காய் நடைமுறையில் நம்மை ஆயத்தப்படுத்துவதற்கு ஏதுவான நேரடிச் செய்திகளே (fortnight Messages) இன்றையத் தேவை வெளிப்படுத்துதல் இரண்டாம் மூன்றாம் அத்தியாயங்களில் கிறிஸ்துவானவர் ஏழு சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் நான் சீக்கிரம் வருகிறேன் என்று ஐந்து முறை கூறியுள்ளார் (வெளி. 2:5,16,25:3:3,11). மெய்யாகவே நான் சீக்கிரம் வருகிறேன் என்ற வார்த்தைகளுடன் இப்புத்தகம் நிறைவுறுகிறது (22:20). இப்புத்தகத்தில் அப்போஸ்தலன் யோவான் எழுதியுள்ள அறிமுக வாசகம் இதோ மேகங்களுடன் வருகிறார்!.(1:7)

நமக்கென்ற தனித் தீர்க்கதரிசனங்கள் மற்றும் பரவசமான காரியங்களிலேயே நாம் அளவுக்கதிகமான ஆர்வம் காட்டுவது வருந்தத்தக்கது. இதுதான் இன்றையச் சபை யுகத்தைக் குறித்த தேவனது பிரதான திட்டத்திலிருந்து நம்மைத் திசைதிருப்பிச் சிக்கல்களில் கொண்டு சேர்க்கும். பொய் தீர்க்கதரிசனங்களில் ஏமாந்து போன நிலையில் நமது உள்ளான மன நிர்ணயங்களில் நாம் ஆட்டம் காண்போம். ஆனால் அதனை வெளியில் காட்டிக்கொள்ள மாட்டோம், அமைதிப்படுத்தி விடுவோம். பக்திவிருத்தி, புத்தி, ஆறுதல் ஆகியவற்றின் மூலம் இறைமக்களை கட்டியெழுப்புவதற்காக எழுதப்பட்டுள்ள திருவசனத்திலிருந்து கொடுக்கப்படவேண்டிய அகத்தூண்டுதலான வார்த்தைகளே திருச்சபையில் வெளிப்படவேண்டிய தீர்க்கதரிசன வரத்தின் சாராம்சமாய் இருக்கவேண்டும் (1 கொரி 14:3). பவுலின் இப்போதனையைப் பேதுரு ஆமோதிக்கிறார். ஒருவன் (தான் பெற்ற வரத்தின்படி)

போதித்தால் (அல்லது பேசினால்). தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கட்டும் (1 பேது 4:10,11-2பேது1:20,21). இதுவும் கூட ஆவியானவரின் மற்றும் திருவசனத்தின் நிறைவுடன் பிரதானமாக ஒருவருக்கொருவர் பேசிப் பத்திவிருத்தியடையச் செய்வதையே குறிக்கும் (1 பேது 4:10-எபே 5:18,19,கொலோ 3:16).

அடுத்த அதிபர் அல்லது பிரதம மந்திரி யாரென்று நாம் முன்னறிவிக்கத் தேவையில்லை. அது ஏரோது என்றாலென்ன பிலாத்து என்றாலென்ன? அது நேபுகாத்நேச்சர் என்றாலென்ன தரியு என்றாலென்ன? அது நெருப்பு என்றாலென்ன, சிங்கக்கெபி என்றாலென்ன? ஆவியானால் நிறைந்த இயேசு கிறிஸ்துவின் சாட்சிகளுக்கு எல்லாம் ஒன்றுதானே? யார் தெரிந்தெடுக்கப்படவேண்டும் யார் தள்ளப்பட வேண்டும் என்று தேவனுக்குத் தெரியும் (தானி5:21ஆ). நமது குருவி மூளையை வைத்துக்கொண்டு சர்வ ஞானியாகிய தேவனுக்கு ஆலோசனையை சொல்ல துணியாததிருப்போம் (ரோ.11:33, 34)

பொது விட ஜெபங்கள் மற்றும் முன் அறிவிப்புகள் மூலம் ஏதே ஒரு அரசியல் கட்சிக்கு ஆதரவு தரும்படி கிறிஸ்தவர்களை தூண்டிவிடுவது எதிர் கட்சியினரது தேவையற்ற பகைமையை சம்பாதிக்கும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை பொது மேடைகளில் எவ்வகையிலும் வெளிப்படுத்த கூடாது. கிறிஸ்தவ நாடு எனப்படும் அமெரிக்காவில் இன்று நிலவும் அரசியல் சூழலானது திருச்சபையினரை ஜனநாயக கிறிஸ்தவர் என்றும் குடியரசு கிறிஸ்தவர் என்றும் பிரித்துவிட்டது. ஏற்கனவே நமக்கு இருக்கும் பிரிவினைகளும் பிளவுகளும் ஏராளம். அந்நாட்டிலுள்ள கிறிஸ்தவ பேச்சு தொடர்பாளர்கள் திருவசன உபதேச அடிப்படையில் நடந்துக்கொண்டிருந்தால் இதனை தவிர்த்திருக்கலாம். சமீபத்திய தேர்தல்களின் விளைவு இந்திய கிறிஸ்தவர்களாகிய நம்மை எவ்வளவாய் தலைகுனிய வைத்து விட்டது. தமிழகத்திலும் இந்தியா முழுவதிலும் இப்பொழுது தேர்தல் களம் சூடுபிடித்துள்ள இதனை குறித்து சற்று அமைதி காக்கும்படி பிரசங்கிமாரை கெஞ்சி கேட்கிறேன். உள்ளூர் சபை சூழலிலேயே தீர்க்கமதரிசன வரம் வெளிப்படுவது எப்பொழுதுமே பாதுகாப்பு ஏனெனில் உடன் தீர்க்கதரிசிகளின் நிதானிப்பு இருக்குமே (1 கொரி. 14:29-33) இவ்விதபரிசோதனையானது கேடான விளைவுகளை தவிர்க்க பாதுகாப்பாய் அமையும் புதிய ஏற்பாட்டில் சூப்பர் ஸ்டார்களுக்கு இடமில்லை (அப். 13:1, 15:32) பிரபலங்களின் தீர்க்கதரிசனங்கள் பொய்த்து போகும்போது தாழ்மையுடன் அவர்கள் மக்களுக்கு முன் சொல்லவேண்டியது. உங்களை தவறாய் வழிநடத்தியதற்காய் என்னை மன்னியுங்கள். ஆம் நமது அறிவும் குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது என்று பவுலடியார் சொன்னதை நான் இப்பொழுது புரிந்து ஏற்றுக்கொள்ளுகிறேன். தேவனது வழிகளைக் குறித்த அறிவில் நான் இன்னும் வளர்ந்து தேறும்படி எனக்காய் ஜெபியுங்கள் (1 கொரி 13:9,11) இப்படி அறிக்கையிட்டால் அவர்கள் இன்னும் உயர்வர்.

நட்சத்திர பிரசங்கிமார் அடிக்கடி மேற்கோள் காட்டுவது ஆமோஸ் 3:7 . கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய நமது ஊழியக்காரருக்கு தமது இரசியத்தை வெளிப்படுத்தாமல்

ஒரு காரியத்தையும் செய்யார். முழு சபையும் புதிய ஏற்பாட்டு யுகத்தில் இறை செய்தியை அறிவிக்கும் தீர்க்கதரிசன சமுதாயமாய் திகழவிருப்பதை முன்னறிவிப்பதே பழைய ஏற்பாட்டிலுள்ள இவ்வசனத்தின் நோக்கும் (அப். 2:17,18,21) ஆமோஸ் 3:8 என்ற அடுத்த வசனமே என்ன சொல்லுகிறது என்று கவனியுங்கள். சிங்கம் கர்ஜீக்கிறது, யார் பயப்படாதிருப்பான். கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார். யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான். இதுவே மோசேயின் தீர்க்க தரிசன எதிர்பார்ப்பு (எண். 11:29) பவுலின் ஏக்கமும் இதுவே. (1 கொரி 14:1, 5:31) யோவான் 15:15ல் நமது ஆண்டவர் தமது சீடரிடம் சொல்லியது இங்கு நமக்கு கூடுதல் வெளிச்சம் தருகிறது. உள்ளூர் சபை ஒவ்வொன்றும் தெசலோனிக்கேயர் சபை போல் இருக்க வேண்டும். (1 தெச. 1:8) சபையை கடந்து புறவழி பாதையில் சென்று தேவன் சமுதாயத்தை ஆசீர்வதிப்பதில்லை. மாறாக மணப்பெண்ணாகிய அவளுடன் சேர்ந்துகொண்டு உயிருட்டுதலுக்கு ஆவியானவர் மக்களை அழைக்கிறார். ( வெளி 22:17) எனவேதான் 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் வேல்ஸ் எழுப்புதலில் தேவனால் முக்கியமாய் பயன்படுத்தப்பட்ட பக்தன் ஈவான் ராபர்ட்ஸ் (1878 - 1951) மன்றாடியது. ஆண்வரே சபையை விட்டு வளைத்து உலகை வளமாக்கும்.

2021ம் ஆண்டு எப்படியிருக்கும் என்று அறிய ஆர்வமா. மத்தேயு 24:25ம் அத்தியாயங்களுக்கு திருப்புங்கள். தமது சீடர்களின் மூன்று கேள்விகளுக்கு ஆண்டவர் கொடுத்த பதிலே இதுவிரு அத்தியாயங்களில் உள்ள நூறு வசனங்கள். இவை எப்பொழுது நிகழும் ? உமது வருகைக்கு அடையாளம் என்ன ? (24 :3) 20 நூற்றாண்டுகள் பழமையான கேள்விகள் நாம் கேட்பவையும்தானே ? 2021ம் ஆண்டுக்கு அடுத்து வரும் ஆண்டுகளும் எப்படியிருக்கும் என்றும், நாம்எவ்விதம் வாழ வேண்டும் என்றும் தெரிந்துக்கொள்ள அதி முக்கியமான இவ்விரு அத்தியாயங்களும் இரண்டு மூன்று முறை கருத்தூன்றிவாசியுங்கள். நாம் கவனத்திலிருத்த வேண்டிய காரியங்களை இங்கு வரிசைப்படுத்துகிறேன்.

1) இயேசுவானவர் கொடுத்த நீண்ட 100 வசனப் பதிலின் முதல் வாக்கியமே என்னவென்று பாருங்கள். ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள் (மத் 24:4) உபதேச வஞ்சகமே முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது (வச.11) தங்கள் சபையினருக்கும் நேயர்களுக்கும் கிரமமாக நெடுகவே ஆரோக்கிய உபதேசத்தைப் போதிக்கும்படி மேய்ப்பர்களையும் பிரசங்கிமாரையும் வருத்திக் கேட்கிறேன். (2 தீமோ 4:2-4, தீத் 2:1) பீறிப்போடும் ஓநாய்களிடமிருந்து மக்களை காப்பாற்றுவதற்கு இது ஒன்றே வழி (அப். 20:27,31) நூதனமானவற்றிலும் கேள்விக்குரிய காரியங்களிலும் ஆர்வம் காட்டக் கூடாதென்று அவர்களை எச்சரியுங்கள். பைபிளுக்கு கூடுதலானவைகளுக்கு இடமே தரக்கூடாது.

2) நாடுகளுக்கிடையே சண்டை சச்சரவுகள் பெருகிய வண்ணமிருக்கும் (மத். 24:6,7) சர்வதேச சமாதான முயற்சிகள் அதிகம் பயனளிக்காது. பல்வேறு நாடுகளின் தலைவர்கள்

கைகுலுக்குவது கட்டிப்பிடிப்பதும் அர்த்தமற்றவையாயிருக்கும். எல்லைப் பிரச்சனை பெருகும் ஏழ்மையான நாடுகள் சூறையாடப்படும்.

3) மதம் சாரா மற்றும் மதம் சார்ந்த இருவகை நாடுகளிலும் கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் கூடும். (மத் 24:9,10) சிறையடைப்பும் இரத்தசாட்சி மரணமும் வாடிக்கையாகும் . மிஷனரி இயக்கங்களும் நற்செய்தியறிவிப்பு நிறுவனங்களும் கடினமான பாதையில் செல்ல வேண்டியதாயிருக்கும் . ஆனாலும் திருச்சபை வளர்ச்சி அமோகமாயிருக்கும் (வச. 13,14, 16:18) சபைக்கு இருக்கவேண்டிய, ஆனால் அது இழந்துவிட்ட, உவர்ப்பையும் பிரகாசத்தையும் திரும்பக்கொண்டுவரும் அசாதரண எழுப்புதலை நாடி நாம் தேவனுக்கு முன் மண்டியிட வேண்டும். (மத. 5:13,14) உபத்திரவப்படுத்துதலைப்பற்றிப் பேசும்போதுதான் ஆண்டவர் உப்பையும் வெளிச்சத்தையும் குறித்துப் பேசினார். (வச,. 11:12) கிறிஸ்தவத்திற்கு எதிரிகள் முன்னர் பிரசங்கிமாரும் கிறிஸ்தவர்களும் ஒருவரையொருர் காட்டிக்கொடுப்பார் (மத் . 24:10) லூக் 21:16)

4) தம்பதியர், பெற்றோர் - பிள்ளைகள் உடன்பிறந்தோர், மற்றும் மனிதரிடையே இருக்கவேண்டிய சுபாவ அன்பு மங்கிக்கொண்டே போகும் (மத். 24:12, 2 தீமோ. 3:1-5) சக. உறவுகள் மேலோட்டமாய்த்தானிருக்கும். சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் தன்னலம் தலைவிரித்தாடும். பொய் பேசுதலும் ஏமாற்றுதலும் சகஜமாகிவிடும்.

5) உடல் சார்ந்த சிற்றின்பங்களும் ஆடவருக்கும் பெண்டிருக்கும் பிரதான நாட்டமாயிருக்கும் பொருளாசையானது சபையையும் சமுதாயத்தையும் கொள்ளை கொள்ளும் (மத. 24:36-39) பாலியல் சீர்கேடுகள் தீவிரமாய்ப் பரவும் (யூதா, 16-19) உல்லாச பொழுபோக்குக்கடுத்த வர்த்தகம் என்றுமில்லாத அளவு பெருகும். டிஜீட்டல் உலகானது நமது இளைஞரைத் திமிங்கலம்போல விழுங்கிபோடும். விசுவாசிகள்கூட தரமான நேரத்தை ஜெபத்திலும் வசன தியானத்திலும் செலவழிப்பதைவிட கவர்ச்சியானதையெல்லாம் வாங்குவதிலும் கண்டதையும் சாப்பிடுவதிலுமே இன்பம் காணுவர். (லூக். 17:26-30,21:34-36).

6. வரவிருக்கும் ஆண்டுகளில் பஞ்சங்களும் கொள்ளை நோய்களும் இன்னும் அதிகமாகவே இருக்குமென எதிர்பார்க்கலாம் (மத் 24:7). இன்னும் கடுமையாகக் கொரோனா நம்மை மறுபடியும் சந்திக்க வரலாம். புதுவிதமான தொற்று நோய்களை நாம் சந்திக்க நேரிடும். அறிவியலும், தொழில் நுட்பவியலும் நமக்குத் தேவையான, ஆனால் அவற்றை நாம் கும்பிடத் துவங்கினால் தேவன் சகிக்கமாட்டார். வரவிருக்கும் பாடுகள் நமது விசுவாசத்தை அசைத்துப் பார்க்கும் (லூக் 18:8). ஆனால் நமது சக்திக்கும் அவரது உதவிக்கும் மிஞ்சி நாம் சோதிக்கப்பட தேவன் இடங்கொடுக்க மாட்டார்(1 கொரி 10:12,13)

7. தங்களது பொறுப்புகளை உணருவதைவிடத் தங்கள் சிலாக்கியங்களில் உற்சாகம் கொள்ளுவதிலேயே மனிதர் தேறியிருப்பர். தேவனருளிய ஆசிகள் மற்றும் நலன்களைக் குறித்த உக்கிராணத்துவப் பொறுப்பு, விசுவாசிகளோ அவிசுவாசிகளோ, எவருக்குமுண்டு. உக்கிராணத்துவத்தில் பொறுப்புணர்வுடன் நடந்துக்கொள்வோர், தேவனுக்குப் பிரியம்.

வேலைகாரர் குறித்த இச்சத்தியத்தையே வலியுறுத்துகின்றன (மத் 24:43-51, 25:14-30). செல்வந்தர் இன்னும் செல்வந்தராக்குவது எளியவர் இன்னும் எளியவராக்குவது எனும் போக்கு தொடரத்தான் செய்யும். கிறிஸ்தோராகிய நாமோ நமது தானதர்மச் செயல்களைப் பெருக்கி கஞ்சத்தனத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் (வச 31-46).

## புத்தாண்டு வாக்குத்தத்தங்கள்

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் கிறிஸ்தவர்களைப் பரவசப்படுத்தும் அடுத்த காரியம் புத்தாண்டு வாக்குத்தத்தங்கள் ஆகும். புத்தாண்டு முழுவதிலும் நாம் மலைகள் பள்ளதாக்குகள் மற்றும் தணல்கள் தண்ணீர்கள் வழியே கடந்து செல்லும்போது பிடித்துக்கொள்ளதற்காகத் தேவனுக்குமுன் நமது தனித் தியான வேளையின் அமர்ந்து வாக்குத்தத்தம் என்னவென்று அறிந்துகொள்ளப் பிரபல பிரசங்கிமாரை நோக்கிக் கொண்டிருப்பது நம்மைத் தவறாய் நடத்தும். ஒவ்வொரு பிரசங்கியாரும் ஒரு வாக்குத்தத்தத்தைச் சொல்லுவார். மூன்று நான்கு கூட்டங்களில் பங்கேற்றால் எந்த வாக்கு உங்களுக்குரியது என்று தெரியுமோ? ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் உங்களை இன்னும் குழப்பும். திருவாக்குகளை எப்படிப் புரிந்து கையாளவேண்டும் என்ற அடிப்படை அறிவு பல ஏமாற்றங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றும்.

புத்தாண்டிற்குப் பிரசங்கிமார் பெரும்பாலும் கூறும் வாக்குத்தத்தங்கள் பழைய ஏற்பாட்டிலேயே உள்ளவை. வாக்குத்தத்தங்களின் பல்வகையை வேறு பிரித்துப் பார்க்கத் தெரியாவிடில் நாம் தடம் புரளுவது எளிது.

1. தனி நபர்களுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங்கள் (Personalised Promises) எடுத்துக் காட்டாக, உன்னைச் சபிக்கிறவர்களை நான் சபிப்பேன் என்று ஆபிரகாமுக்குத் தேவன் வாக்கப் பண்ணினார் (ஆதி 12:3) நற்செய்தியை ஏற்க மறுத்த சமாரியக் கிராமத்தின் மீது அக்கினியை இறக்க இயேசுவிடம் அனுமதி கேட்ட சீடரின் மனதில் இதுவே இருந்திருக்கலாம். ஆனால் அவர்களது மனப்பான்மை தவறானது என்று இயேசு கடிந்துக்கொண்டார் (லூக் 9:52-56). தம்மைத் தூஷித்துச் சபித்தவர்களுக்காகவும் இயேசு ஜெபித்தார். நம்மைச் சபிக்கிறவர்களை நாம் ஆசிர்வதிக்கவேண்டும் என்றே அவர் நமக்கப் போதித்துள்ளார் (மத் 5:44,45). முதல் மிஷனரி ஆபிரகாம்தான் எனினும் அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்கினை இன்றைய மிஷனரிப் பணிச் சூழலில் நாம் எடுத்துக்கொள்ள முடியாது!
2. தேசிய அல்லது கோத்திர வாக்குத்தத்தங்கள் (National / Tirbal Promises) நப்தலி கோத்திரம் குறித்து மோசே தனது இறப்பிற்கு முன் பேசுகையில் மேற்கு நாட்டையும் கிழக்கு நாட்டையும் அவர்கள் சுதந்தரிப்பார்கள் என்றார் (உபா 33:23). இது வாக்குப்பண்ணப்பட்ட நாட்டில் அவர்களுக்குக் கிடைக்கவிருந்த பாகம் (யோசு 19:32). இஸ்ரவேலரைத் தேவன் சிதறடித்த பின்னர் மறுபடியும் அவர்களைத் தங்கள் நாட்டிற்குத் திரும்பிவரப்பண்ணுவதாக வாக்குப்பண்ணினார். இலங்கைக் கிறிஸ்தவர்களோ, திபெத்தியக் கிறிஸ்தவர்களோ தங்கள் தாயகம் திரும்புவதற்கு இவ்வாக்கினை உரிமை பாராட்ட முடியாது! இன்னொரு வகை.

3. யுகங்களுக்கடுத்த வாக்குத்தத்தங்கள் Dispensational Promises ஏசாயா 11:6-9இல் நாம் வாசிப்பது, ஆட்டுக்குட்டியுடன் ஓநாய் தங்கும், வெள்ளாட்டுக்குட்டியுடன் புலி படுத்துக்கொள்ளும் கன்றுக்குட்டியும் சிங்கமும் சேர்ந்து விளையாடும் பசுவும் கரடியும் கூடி மேயும் மாட்டைப்போல் சிங்கம் வைக்கோல் தின்னும், பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளையின்மீது விளையாடும் இப்படிப் பல ! இது கிறிஸ்துவின் வரவிருக்கும் மண்ணுலக ஆட்சியைக் குறிக்கும். சபை யுகத்திற்கு இது பொருந்தாது.
4. மேசியாவிற்குரிய வாக்குத்தத்தங்கள் (Messianic Promises) அவனது எலும்புகளையெல்லாம் கர்த்தர் காப்பாற்றுகிறார். அவற்றில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்று சங்கீதம் 34:20 இல் நீதிமானுக்கு ஒரு வாக்குண்டு. இயேசுவானவர் இறந்துவிட்டாரென்ற பின்னரும் அவரது எலும்புகள் முறிக்கப்பட்டதற்கு இதுவே காரணமென்று யோவான் 19:36 இல் இவ்வாக்கு மேற்கோள் காட்டப்பட்டுள்ளது (யோ 19:33,36). நமது உடல் பாதுகாப்பிற்காகத் தேவனிடம் நாம் ஜெபிக்கலாம் என்றாலும் குறிப்பிட்ட இவ்வாக்கு முழுமையாக இறைமகனுக்கே உரித்தானது. மன்னிக்கப்பட்ட திருடனின் கால்களும் முறிக்கப்பட்டவனவே (வச 32) அப்பப்பா சாலை விபத்துகளிலும் சறுக்கும் குளியலறைகளிலும் எழும்பு முறிவடைந்த தேவ ஊழியர்தான் எத்தனை!

தங்களது பத்திரிக்கை மற்றும் நாட்காட்டிகளில் பிரசங்கிமார் அதிகப் பிரியமாய்ப் பயன்படுத்தும் வாக்குத்தத்தங்களும் உண்டு. ஒன்று ஏசாயா 25:8, கர்த்தாராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்த கண்ணீரைத் துடைப்பார். கண்ணீரில்லாத பிரசங்கியாரோ விசுவாசியோ உண்டோ? கண்ணீரில் கொஞ்சம் மட்டுமே இன்று துடைக்கப்படுகிறது. கிறிஸ்து திரும்ப வரும்போது தான் ஏசாயாவிலுள்ள இவ்வாக்கு நிறைவேறும் (வெளி 7:17, 21:4). காலண்டரில் அதுவும் குறிப்பாக ஜனவரி மாதத்திற்கு இன்னொரு பிரபல வசனம் ஆகாய் 2:19 நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்.

பிரியமானவர்களே, இன்று என்பது கிறிஸ்துவின் மறுவருகையின் போது தேவன் வானுலகையும் மண்ணுலகையும் அசையப்பண்ணி அரசுகளின் சிங்காசனங்களைக் கவிழ்த்து ஆயிரமாண்டு அரசாட்சியை நிறுவும் நாளையே குறிக்கும் (வச 20-23). ஒரு மனிதன் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும் நாளன்று தான் ஆசீர்வாதங்களிலெல்லாம் ஆசீர்வாதம் அவன் வாழ்வில் துளிர்க்கிறது (லூக் 19:9,10 , 2 கொரி 6:2). உபகாமம் 28:1ஐ ஜாதிகள் என்ற சொல்லுடன் அப்படியே காலண்டர்களில் அச்சடிக்கப்படுவதை என்னால் தாங்க முடிவதில்லை. அபத்தம்! நாடார் குலத்தைச் சேராத கிறிஸ்தவரல்லாத ஒருவர் நாடார் கிறிஸ்தவர் இல்லையென்றால் இந்த நாட்காட்டி வாசகத்தைப் பார்த்து என்ன நினைப்பார்? நண்பர்களே என்னை கோபித்துக்கொள்ளாதீர்கள். நமக்குப் பக்தி இருந்தால் போதாது, புத்தியும் வேண்டும்! இவ்விதக் காலண்டர் தாள்களை எரித்துவிடுங்கள். திருமறையின் புது மொழியாக்கங்களிலிருந்து பொருத்தமான வார்த்தைகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

எடுத்துகாட்டாக ஜாதிகள் என்ற பழைய மொழியாக்க சொல் மக்களினங்கள் என் அழகாகப் பொது மொழிப்பெயர்ப்பாகிய திருவிலிலயத்தில் தரப்பட்டுள்ளது. மொழி வளர்ச்சியில் தமிழ்க் கிறிஸ்தவர்களாகிய நாம் பின்தங்கியே இருக்கிறோம்.

திருமறையிலுள்ள வாக்குத்தத்தங்களில் இன்னொரு வகை

5. சந்தர்ப்பம் சார்ந்த வாக்குத்தத்தங்கள் (Situational Promises). நற்செய்தியை பறைசாற்றப் பன்னிருவரை ஆண்டவர் அனுப்பிவைத்தபோது பணப்பை எடுத்துச் செல்லவேண்டாம் என்று அவர்களிடம் கூறினார் (மத் 10:5-10). இஸ்ரவேல் நாட்டின் கிராமங்களுக்கு அவர்களை அனுப்பி வைத்த குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றில்தான் இவ்விதம் சொல்லியனுப்பினார் (வச 5,6). வேறொரு சந்தர்ப்பத்தில் அவர்களைப் பணப்பை எடுத்துச்செல்லச் சொன்னார் (லூக் 22 :35,36). பவுலை எவரும் தாக்கமாட்டார்கள் என்ற பாதுகாப்பை அவர் கொரிந்து நகரிலிருந்தபோது ஆண்டவர் வாக்களித்தார் (அப் 18:9,10). ஆனால் அப்படி ஒரு வாக்கு எரிசலேமில் அவருக்கு கொடுக்கப்படவில்லை. மாறாக அவரை அடித்து நொறுக்கினார்கள் (வச 23-25). பாதுகாக்கும் தூதர்கள் அப்பொழுது எங்கே? தாயகம் திரும்பிவட்டார்களோ? (சங் 34:7).

புத்தாண்டிற்கு மட்டுமில்ல இன்னும் பல காரியங்களுக்கும் திருமறை வாக்குகள் தவறாய் பயன்படுத்தப்படுகின்றன. தங்களது பிரமாண்ட ஆலயக் கட்டிடங்களுக்கும் ஜெபக் கோபுரங்களுக்கும் சபை மேய்ப்பர்களும் பிரசங்கிமாரும் திருவசன வாக்குத்ததங்களை உரிமை பாராட்டுவது ஓர் எடுத்துக்காட்டு. உபாகமம் 12:5,13 மற்றும் 2 நாளாகமம் 7:12,15,16 ஆகிய வசனங்களை மேற்கோள் காட்ட தங்களது கட்டிடங்கள் புனிதமானவை விசேஷித்தவை என்றெல்லாம் மக்களிடம் கூறுவார்கள். யுகங்களின் அடிப்படையில் தேவனது செயல்பாடுகள் குறித்த அறிவு இவர்களுக்கு இல்லாதிருப்பது எனக்கு வருத்தம். ஜெப மாலை என்று ஒன்றைக் குறித்துச் சமாரியப் பெண் கொண்டிருந்த பாரம்பரிய நம்பிக்கையை இயேசுவானவர் திருத்தினார் (யோ 4:20 -24). கிருபையின் இந்த யுகத்தில் அவரது பெயரால் இருவர் அல்லது மூவர் எங்கு கூடினாலும் அவர்கள் நடுவில் அவர் இருக்கிறார் (மத் 18:20). இன்று தேவன் மண்டபங்களை அல்ல மக்களையே புனிதமாக்குகிறார் (எபே 2:19-22). எந்த இடமும் மற்றதைவிடப் புனிதமானது அல்ல. திரைசீலை கிழிந்துவிட்டது (மத் 27:51, மாற் 15:38). அதனை திரும்பத் தைக்காதீர்கள் ! உன்னதமானவர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார் என்று திருச்சபையின் முதல் இரத்த சாட்சியானவர் சரியாய்ச் சொன்னார் (அப் 7:48). இதனை இன்று ஓர் உயர் ஆங்கிலிக்கன் அல்லது ரோமன் கத்தோலிக்கனிடம் சொல்லிப் பாருங்கள், ஸ்தேவானைப் போன்று உயிர் போய்விடும் கவனம்!.

அப்படியானால் இன்னொரு கேள்வி எழுகிறது, தேவனது வாக்குகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கின்றன என்பதின் பொருளென்ன? (2 கொரி 1:20). கிறிஸ்துவுக்குள் ... அவருக்குள் என்ற வார்த்தைகள் தான்

இங்கு முக்கியமானவை . அதாவது எல்லா வாக்குகளும் என்று இங்கு குறிப்பிடப்டுவது மீட்பின் ஆசீர்வாதங்களை அடுத்தவையாகும்.

(1) நித்திய ஜீவன் குறித்த வாக்குத்தத்தம் (தீத் 1:1-3,1 யோ 5:13),
(2) கிறிஸ்து மூலம் கிடைக்கும் இரட்சிப்பு குறித்த வாக்குத்தத்தம் (எபி 11:13,39,40).
(3) கிரியைகள் இல்லாமல் நீதிமானாக்கப்படுதல் குறித்த வாக்குத்தத்தம் (ரோ 4:3,6-8,13,14).
(4) கிறிஸ்துவின் இளைப்பாறுதல் குறித்த வாக்குத்தத்தம் (எபி 4:1, மத் 11:28).
(5) பரிசுத்த ஆவியானவர் குறித்த வாக்குத்தத்தம் (அப் 1:4,5 , 2:33) .
(6) திவ்விய சுபாவத்தில் பங்கு குறித்த வாக்குத்தத்தம் (2 பேது 1:4)
(7). கிறிஸ்துவின் நங்கூரமான பாதுகாப்பு குறித்த வாக்குத்தத்தம் (யோ 10:27-29).
(8), உயிர்த்தெழுதல் குறித்த வாக்குத்தத்தம் (அப் 26:6-8).

இவைத்தான் உன்னதங்களில் நாம் கிறிஸ்துவுடன் அனுபவிக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் (எபே 1:3).

இன்னொரு கேள்வி: என்னை ஊக்குவிப்பதற்கும், எனக்கு உறுதியளிப்பதற்கும், என்னை விடுவிப்பதற்கும் ஏதுவான தனிப்பட்ட செய்தியொன்றைத் திருவசன வாக்கு ஒன்றின் மூலம் தேவன் எனக்குத் தர முடியாதா? தேவனால் முடியும் தேவன் அப்படி செய்கிறார். ஆனால் மீட்பின் ஆசீர்வாதங்களுக்குரிய வாக்குத்தத்தங்கள் போல நாம் வேறெந்த வாக்கையும் பொதுவாக்கக்கூடாது. அங்கும் கூட மேற்கண்ட பத்திகளில் விளக்கியுள்ளபடி அதினதின் வரம்புகளுக்குள்ளேயே வாக்குத்தங்கள் கையாளப்படவேண்டும். இல்லையேல் நாம் கானல் நீரை விரட்டிய கதையாகிவிடும். ஆரோக்கிய உபதேசக் கருத்தரங்கு 1 (Sound Doctorine Seminar - 1, 1997). கருத்தரங்கு -2 (SDS -2. 2007) மற்றும் கருத்தரங்கு -3 (SDS 3. 2012) ஆகிய கூடுகையில் நான் போதித்த பாடங்களைக் கேட்கும்படி உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். இவை தமிழாக்கம் இல்லாது ஆங்கிலத்தில் 2021 ஜனவரி முதல் WhatsApp மற்றும் websiteஇல் வெளியாகும்.

## பொறுப்புகள் நிறைந்த புத்தாண்டு (Decade of Resposibilities)

2021 -2030 என்ற புத்தாண்டின் எழுப்புதல் பத்தாண்டு (Decade of Revival) என்று அகிலவுலக அளவில் திருச்சபைகளும் திருச்சங்கங்களும் அறிவித்துள்ளன. அது எழுப்புதல் பத்தாண்டு என்றிருக்கவேண்டுமா, பொறுப்புகள் பத்தாண்டு என்றிருக்க வேண்டுமா? எழுப்புதல், எழுப்புதல் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கும்போது பளு முழுவதையும் தேவனது தோள்களில் சுமத்திவிடுகிறோம். ஏதோ தேவன் எழுப்புதலை அனுப்பத் தயங்குவது போலவும், அவரை நாம் கட்டாயப்படுத்த வேண்டுவது போலவும் நினைத்துவிடுகிறோம். தேவனது பங்கை அளவுக்குமீறி முக்கியப்படுத்தி நமது பொறுப்பை போதுமான அளவு வலியுறுத்தாததே நமது கிறிஸ்தவ வாழ்விலும் பணியிலும் சமநிலை இல்லாது சரிவதற்குக் காரணம் எழுப்புதல் குறித்த திருமறைப் பகுதிகளில் பெரும்பாலானவை நமது பொறுப்பையே அழுத்திக் கூறுகின்றன (2 நாளா 7:14, ஓசி 6:1-3, ஏசா 57:15 , யோவேல் 2:17 -19,23. அப்

3:19,20). நமது பொறுப்பை போதுமான அளவு உணராதிருப்பதே எழுப்புதல் தாமதிப்பதற்கு ஒரு முக்கிய காரணம். பொறுப்புள்ள கிறிஸ்தவர்களாக, பொறுப்புள்ள இளைஞர்களாக, பொறுப்புள்ள பணியாட்கள் மற்றும் தலைவர்களாக, பொறுப்புள்ள தம்பதிகள் மற்றும் பெற்றோர்களாக, பொறுப்புள்ள பிரசங்கிமாராக, பொறுப்புள்ள குடிமக்கள் மற்றும் அதிகாரிகளாக நாம் எப்படி நடந்துக்கொள்ளவேண்டும் என்று பைபிளிலிருந்து கற்றுக்கொள்ளப் போதுமான நேரம் வரும் ஆண்டில் எடுத்துக்கொள்வோம். புத்தாண்டுத் தீர்க்கத்தரிசனங்கள் மற்றும் புத்தாண்டு வாக்கத்தத்தங்கள் எல்லாம் நிறைய கேட்டுவிட்டோம். இப்பொழுது திடமான புத்தாண்டுத் தீர்மானங்கள் (Resolutions) எடுத்து அவற்றை நிறைவேற்ற முழு மூச்சாய் முயலுவோம்.

## புத்தாண்டுத் தீர்மானங்கள்:

நாம் திவ்விய சுபாவத்தில் பங்கேற்போம் என்பதே பைபிலிலுள்ள வாக்குத்தத்தங்களில் எல்லாம் வாக்குத்தத்தம் ஆகும். இதனை மகா மேன்மையும் அருமையாமதான வாக்கு எனத் திருமறை அழைக்கிறது (2 பேது 1:3,4). இயேசுவை முகமுகமாய்ச் சந்திக்கும்போது தேவப்பிள்ளைகளாகிய நாம் அவரைப் போலவே மாறுவோம் என்ற நம்பிக்கைகளிலெல்லாம் நம்பிக்கைக்கு நேரே இவ்வாக்கு நம்மை வழி நடத்துகிறது (1யோ 3:1,2). மகிமையான இந்த இலக்கை மனதிற்கொண்டே நமது வாழ்வில் தேவன் எந்தக் காரியத்தையும் அனுமதிக்கிறார் (ரோ 8:28,29). இப்படியிருப்பதால் தேவனது திவ்விய சுபாவத்தின் வெளிப்பாடுகளை அவரது வசனத்திலிருந்து கூர்மையாக கற்றுக்கொள்ளவேண்டும். தேவன் தமது பல்வேறு குணாதிசயங்களைக் குறிக்கும் பெயர்களால் பரிசுத்த வேதாகமத்தில் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனைப் பின்பற்றுகிறவர்கள் என்றிருக்கும்படி நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (எபே 5:1). வாக்குகளிலெல்லாம் வாக்கு நமது வாழ்வில் நிறைவேறுவதற்கு ஏதுவாக இந்தப் பெயர்களின் அடிப்படையில் நமது புத்தாண்டுத் தீர்மானங்களை எடுக்கலாம். இப்பெயர்களில் ஒரு சில ஒரே தடவையும் மற்றவை பல முறையும் வருகின்றன. இவற்றை ஆங்கில அகர வரிசையில் கீழே தொகுத்துள்ளேன். ஒவ்வொன்றும் எத்தனை முறை பைபிளில் வருகிறது என்பதும் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெயருக்கும் ஒரு சில வசனக் குறிப்புகள் மட்டும் தெரிந்தெடுத்துள்ளேன். அவற்றைக் கட்டாயம் எடுத்து வாசியுங்கள்.

**(1) ஆறுதலின் தேவன் (1) God of COMFORT... 2 கொரி 1:3-5**

பலவித இன்னல்கள் வழியே நான் சென்றபோது தேவனிடமிருந்த பெற்ற அதே ஆறுதலினால் துக்கங்களுலும் துன்பங்களிலும் உழலுவோரை ஆறுதல்படுத்தத் தீர்மானிக்கிறேன்.

**(2) பிதாக்களின் தேவன் God of FATHERS..**

(அ) நமது பிதாக்களின் தேவன் (7) .. 2 நாளா 20:6,12 அச்சுறுத்தும் சூழல்களைச் சந்திக்கும்போது எனது சொந்த பலத்தில் அல்ல, தேவனது வல்லமையிலும் சத்துவத்திலுமே சார்ந்திருக்கத் தீர்மானிக்கிறேன்.

(ஆ) அவர்களது பிதாக்களின் தேவன் (20) 2 நாளா 36:15,16

தேவனது கடுங்கோபத்திற்கு ஆளாகிச் சகாயமின்றி அழிக்கப்படாதிருக்க தமது செய்தியாளர்கள் மூலம் அவர் கொடுக்கும் எச்சரிப்புகளைக் குறித்துக் கவனமாயிருக்கத் தீர்மானிக்கிறேன்.

(இ) உனது பிதாவின் இருதயத்தைத் துருவி ஆராய்ந்து எனது எண்ணங்களின் தோற்றங்களையெல்லாம் அறிந்திருக்கிறார் என்ற உணர்வுடன் உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் அவருக்குச் சேவை செய்யத் தீர்மானிக்கிறேன்

(ஈ) உங்கள் பிதாக்களின் தேவன் (16) 2 நாளா 29:1-6

தேவனுக்கு அருவருப்பான குப்பைக்கூளங்களையெல்லாம் தூக்கியெறிந்து எனது வாழ்வையும் எனது சபையையும் தூய்மைப்படுத்தத் தீர்மானிக்கிறேன்.

**(3) மனுவுடலுள்ள யாவருக்கும் தேவன் (3) God of ALL FLESH எண் 16:22**

ஒரு சில முரட்டாட்டக்காரனின் பொருட்டு மக்கள் அனைவரையும் தேவன் அழித்துவிடாதபடி அவருக்கு முன்பாக மன்றாட்டு ஜெபம் ஏறெடுத்து நிற்கத் தீர்மானிக்கிறேன்.

4) **மகிமையின் தேவன் (2) God of GLORY... அப் 7:2 (எபி 11:9,10)**

மகிமையான நித்திய காரியங்களில் எனது மனதைப் பாதிக்கும்டி, நிலையான இவ்வுலகப் பொருட்கள் மீதுள்ள எனது பிடிப்பைத் தளர்த்தத் தீர்மானிக்கிறேன்.

5) **தேவர்களுக்கெல்லாம் தேவன் (5) God of GODS... உபா. 10:17,18**

வசதியுள்ளோருக்கும் வறியோருக்கும் இடையில் எவ்வித பாகுபாடும் காட்டாது, அனாதைகள், விதவைகள், உணவற்றோர், உடையற்றோர் போன்றோரை ஆசீர்வதிக்க என்னால் இயன்ற அத்தனையும் செய்யத் தீர்மானிக்கிறேன்.

6) **பரலோகத்தின் தேவன்** (23) **God of HEAVEN...** எஸ்றா 5:11, நெகே. 1:4,5, 2:4,20

தனி நபர்கள், குடும்பங்கள் மற்றும் திருச்சபைகளின் உடைந்துப்போன நிலையை விமர்சிக்காமல் அவற்றைத் திரும்பக் கட்டியெழுப்பும் முயற்சியில் தீவிரம் காட்டத் தீர்மானிக்கிறேன்.

7) **நம்பிக்கையின் தேவன் (1) God of HOPE...** ரோ. 15:13

நிச்சயமற்ற சூழல்களில் தூயாவியானவரின் துணையுடன் சாதகச் சிந்தைக் கொண்டு தேவன் மீதுள்ள விசுவாசத்தினால் சந்தோஷமாய், சமாதானமாய் இருக்கத் தீர்மானிக்கிறேன்.

8) **சேனைகளின் தேவன்** (4) **God of HOSTS..** சங். 80:7,14,19

எனது குறைபாடுகளை இவ்வுலக வழிமுறைகளினால் சரிசெய்ய முயலாது நான் புத்துயில் பெற்று புதுப்பிக்கப்பட்டு, ஆதி நிலையேறும்படித் தேவனுக்குமுன் தினமும் காத்திருக்கத் தீர்மானிக்கிறேன்.

9) **இஸ்ரவேலின் தேவன் (201) God of ISRAEL...** இரா. 8:23

(வேறெந்த பெயரையும்விட இதுவே திருமறையில் அதிகம் வருகிறது) தமது உடன்படிக்கையைத் தேவன் காத்துக்கொள்வது போலவே அவருக்கும் எனது வாழ்க்கைத் துணைக்கும், குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், உடன் பணியாளர்களுக்கும் நான் கொடுத்த வாக்குகளை நிறைவேற்றத் தீர்மானிக்கிறேன்.

10) **நீதி செய்கிற தேவன் (2) God of JUSTICE...** ஏசா. 30:15-18

தேவனே எனக்கு நியாயம் செய்வார் என்று அமைதியாகவும் நம்பிக்கையுடனும் அவர் மீதே சார்ந்திருந்து அவரை மிஞ்சி ஓடாதிருக்கத் தீர்மானிக்கிறேன்.

11) **உயிருள்ளோரின் தேவன்** (1) **God of the LIVING...** லூக் 20:38 (அப். 17:28)
தேவனுக்குள்ளேயே நான் பிழைத்து, அசைந்து, உயிர் வாழ்கிறேன் என்ற உண்மையை எனக்கு எப்பொழுதும் நினைவுபடுத்திக்கொள்ள தீர்மானிக்கிறேன்.

12) **அன்பின் தேவன் (1) God of LOVE...** 2 கொரி 13:11
கிறிஸ்வில் வெளிப்பட்ட தேவனது ஒப்புரவாகுதலின் அன்பின் மூலம் இல்லத்திலும் சுற்றத்திலும், சபையிலும், பணியிடத்திலும் ஒருமனத்தை காத்துக்கொண்டு யாவரோடும் சமாதானமாய் வாழத் தீர்மானிக்கிறேன்.

13) **பொறுமையின் தேவன்** (1) **God of PATIENCE...** ரோ. 15:5-7
என்மீது தேவன் காட்டும் பொருமைக்காய் அவருக்கு நன்றியுள்ளவனாய், அதற்கு பிரதிபலிப்பாய் எனது உடன் விசுவாசிகளை அவர்கள் இருக்கும் நிலையிலேயே ஏற்றுக்கொண்டு ஒருமனத்துடன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்பிட தீர்மானிக்கிறேன்.

14) **சமாதானத்தின் தேவன் (5) God of PEACE... ரோ.16:20 தெச. 5:23, எபி. 13:20,21**
தேவன் என்னை அமோக வெற்றிக்குள்ளும், முழுமையான பரிசுத்தத்திற்குள்ளும் நிவைான பூரணத்திற்குள்ளும் முடிவில் நடத்துவார் என்ற குதூகல எதிர்பார்ப்புடன் வாழ்ந்திட தீர்மானிக்கிறேன்.

**15) இரட்சிப்பின் தேவன் God of SALVATION..**

(அ) எனது இரட்சிப்பின் தேவன் (7) ஆப 34:17-19

எனது இழப்புகள் மற்றும் உடல் நலக்குறைவுகள் நடுவிலும் நித்திய இரட்சிப்பாகிய ஈவை நினைத்துத் தேவனுக்குள் மகிழ்கொண்டாடிக் கொண்டிருக்கத் தீர்மானிக்கிறேன்.

(ஆ) நமது இரட்சிப்பின் தேவன் (6) சங். 85:4-7

எனது வாழ்விலும் பணியிலும் வறட்சி தோன்றும் காலங்களில், எழுப்புதல் ஆசிகளுடன் தேவன் என்னை மறுபடியும் சந்திக்கும்படி அவரையே நோக்கிக் கதறிடத் தீர்மானிக்கிறேன்.

**16) சத்திய தேவன் God of TRUTH.. ஏசா. 65:16**
எனது வார்த்தைகள் தேவனுடைய பார்வையில் ஏற்புடையவையாய் இருக்கும்படி எனது வாய்க்குக் காவல் வைத்து பொய் சொல்லுதலையும் மிகைப்படுத்தலையும் வெறுத்திட தீர்மானிக்கிறேன்.

தற்பரிசோதனைக்காய் இத்தீர்மானங்கனை அவ்வப்போது திரும்பவும் வாசித்துக் கொள்ளுங்கள்,தோல்விகளால் மனந்தளர்ந்துவிடாதீர்கள். எழுந்து மறுபடியும் தீர்மானியுங்கள். உங்களில் நற்செயலைத் தொடங்கிய தேவன் இயேசு கிறிஸ்துவின் நாள் வரை அதை நடப்பித்து நிறைவாக்குவார் என்ற நிச்சயித்திருங்கள். (பிலி. 1:5)

## குடியரசு தின வாழ்த்துக்கள்



இந்தியா சுதந்திரம் அடைந்தாலும் இந்திய சட்டங்கள் முறைப்படுத்தப்படவில்லை. எனவே 1950ம் ஆண்டு இந்திய சட்டம் அம்பேத்கார் போன்ற சட்ட வல்லுனர்களால் இயற்றப்பட்டு அறிமுகப்படுத்தியபின் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய பதவிகளுக்கு தலைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு இந்திய அரசாங்கம் இயங்கின. அந்த ஆரம்ப நாள் ஜனவரி 26ம் தேதி குடியரசு நாளாக கொண்டாடப்படுகிறது. பல லட்ச மக்கள் காஷ்மீரிலிருந்து – கன்னியாகுமரி வரை பல ஆயிரம் பாஷைகள், பல அயிரம் மதங்கள், பல இன மக்கள் ஒன்று சேர்ந்து போராடி, உயிர் தியாகங்கள் செய்து, சிறை தண்டனைகள் அனுபவித்து பெற்ற சுதந்திர இந்தியாவை, இந்திய மக்களாலேயே அளுகை செய்த இந்த குடியரசு தின நாளை நினைவு கூறுவோம். நம் இந்திய மக்களுக்கு வாழ்த்துதல். இந்தியாவை ஆளுகிறவர்களுக்கும் வாழ்த்து கூறுகிறேன்.

*Editor & Publisher* - **Dr. Pushparaj**

**JANUARY 2023**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.